# May 8, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஹன்டா வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட 'எம்.வி.ஹோண்டியஸ்' உல்லாசக் கப்பலில் இருந்த பல பயணிகள் உரிய மருத்துவக் கண்காணிப்பு இன்றி பல்வேறு நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

(i) நெதர்லாந்தைச் சேர்ந்த இந்தக் கப்பல் ஆர்ஜென்டீனாவிலிருந்து பயணத்தைத் தொடங்கியதால், அங்கேயே பயணிகளுக்குத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து உலக சுகாதார மையம் ஆய்வு செய்து வருகிறது. இது வரை ஒரு நெதர்லாந்துனர் தம்பதியினர் மற்றும் ஒரு ஜெர்மனி பெண் என மூவர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ii) கடந்த ஏப்.24-ஆம்தேதியன்று முதல் உயிரிழப்பு நிகழ்ந்த பிறகு சுமார் 12 நாடுகளைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட பயணிகள், தெற்கு அட்லான்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள பிரிட்டனின் அந்நியப் பிரதேசமான புனித ஹெலினா தீவில் இறங்கி தங்கள் நாடுகளுக்குச் சென்றுள்ள அதிர்ச்சித் தகவல் சுமார் 2 வாரங்களுக்குப் பிறகு தற்போது வெளியாகியுள்ளது.

(iii) எலிகளின் கழிவுகள் மூலம் பரவக்கூடிய இந்த வைரஸ், தென் அமெரிக்காவில் - காணப்படும் ‘ஆண்டீஸ்’ வகையைச் என உறுதி சார்ந்தது செய்யப்பட்டுள்ளது. மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் தன்மை கொண்ட ஒரே ஹன்டா வைரஸ் வகை இது என்பதால், உலக நாடுகள் பலவும் தங்கள் நாட்டுக்குத் திரும்பிய பயணிகளைக் கண்டறிந்து தனிமைப் படுத்தும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன.

(iv) சிங்கப்பூரில் 2 முதியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அதே போல், ஸ்விட்சர்லாந்தில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பிரிட்டனில் கப்பலில் பயணித்த இருவர் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர்.

(v) தற்போது எம்.வி.ஹோண்டியஸ் கப்பல் ஸ்பெயினின் கேனரி தீவுகளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. கப்பலில் இன்னும் 140-க்கும்மேற்பட்ட பயணிகளும், ஊழியர்களும் உள்ளனர்.

(vi) கடந்த மே 2-இல் உயிரிழந்த ஜெர்மனி பெண்ணின் உடலும் இன்னும் கப்பலிலேயே வைக்கப்பட்டுள்ளது. கப்பலில் பணியாற்றிய மருத்துவர் உள்பட மூவர் அவசர சிகிச்சைக்காக அண்மையில் கேப் வெர்டே தீவு அருகே ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு, ஐரோப்பிய மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதனிடையே, கப்பலில் பயணிக்காத பெண் விமானப் பணியாளர் ஒருவர், பாதிக்கப்பட்ட பயணியுடன் தொடர்பில் இருந்ததைத் தொடர்ந்து தற்போது ஆம்ஸ்டர்டாம் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டால், கப்பலுக்கு வெளியே பாதிப்புக்குள்ளான முதல் நபராக அவர் இருப்பார். உலக சுகாதார மையம் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

2. இந்தியாவில் வர்த்தகக் கப்பல்களைப் பதிவு செய்யும் இந்திய நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானிய திட்டத்தை வரும் 2030-31- ஆம் ஆண்டு வரை மேலும் 5 ஆண்டுகளுக்கு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சகம் நீட்டித்துள்ளது. இதுகுறித்து கப்பல் போக்குவத்துத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

(i) மத்திய அரசின் சரக்குகளை இறக்குமதி செய்வதற்காக மத்திய அமைச்சகங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் சார்பில் வெளியிடப்படும் உலகளாவிய ஒப்பந்தங்களை ஏலம் எடுக்கும் இந்திய கப்பல் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்காக ரூ.1,624 கோடி ஒதுக்கீட்டில் 5 ஆண்டுகால திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது. இதற்கு கடந்த 2021ஆம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

(ii) இந்தியாவின் கடல்வழிப் போக்குவரத்து மற்றும் உலகளாவிய கப்பல் போக்குவரத்து இருப்பை வலுப்படுத்தும் வகையிலும், இந்தியாவில் வர்த்தக கப்பல்கள் பதிவை ஊக்குவிக்கும் நோக்கிலும் இத்திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது.

(iii) இத்திட்டத்தின்படி, இந்தியாவில் 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதிக்குப் பிறகு பதிவு (இந்திய தேசியக் கொடி பொருத்துதல்) செய்யப்படும் கப்பல்கள், 10 ஆண்டுகளுக்கும் குறைவான பழமையானதாக இருக்கும் பட்சத்தில், குறைந்தபட்ச ஏலம் கோரிய வெளிநாட்டு நிறுவன வழங்கிய விலைப்புள்ளியில் 15 சதவீதம் அல்லது இந்திய கொடி பொருத்திய கப்பல் வழங்கிய விலைப்புள்ளிக்கும் வெளிநாட்டு நிறுவனம் வழங்கிய விலைப்புள்ளிக்கும் இடையேயான வித்தியாசம் ஆகிய இரண்டில் எது குறைவோ அந்தத் தொகை மானியமாக வழங்கப்படும்.

(iv) இதில், 2021-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதிக்கு முன்பாக உள்ள இந்திய கொடி பொருத்திய கப்பல்களாக இருந்தால், இந்த மானியம் 10 சதவீதம் என்ற அளவில் வழங்கப்படும் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மானிய திட்டம் தற்போது 2030-31-ஆம் ஆண்டு வரை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

3. நாடு முழுவதும் 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்துத் வயதுடைய தொழிலாளர்களுக்குமான இலவச ஆண்டு உடல் பரிசோதனை திட்டத்தை மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தொடங்கி வைத்தார். தில்லியில் இஎஸ்ஐசி மருத்துவக் கல்லூரி - மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இத்திட்டத்தை அவர் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

(i) நாடு முழுவதும் உள்ள தொழிலாளர்களின் நலன், சமூகப் பாதுகாப்பு, கௌரவத்தை உறுதிப்படுத்தும் வகையில் 4 புதிய தொழிலாளர் சட்டங்களை மத்திய அரசு அண்மையில் நடைமுறைப்படுத்தியது. அனைத்துத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு மத்திய அரசு உறுதியேற்றுள்ளது. வேலை வாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூக நலத் திட்டங்கள் மூலமாக தொழிலாளர் சக்தி மற்றும் இளைஞர்

சக்திக்கு அதிகாரமளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

(ii) மத்திய அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 10 ஆண்டுகளுக்கு முன்பு 30 கோடியாக இருந்தது. தற்போது 94 கோடியாக அதிகரித்துள்ளது. அதாவது 19 சதவீதத்திலிருந்து 64 சதவீதமாக பயனாளிகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

(iii) அதுபோல, தொழிலாளர் மாநில காப்பீட்டுக் கழக திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் எண்ணிக்கை 10 ஆண்டுகளுக்கு முன்பு 7 கோடியாக இருந்தது, தற்போது 15-ஆக அதிகரித்துள்ளது.

(iv) தற்போது, தொழிலாளர்களுக்கான ஆண்டு உடல் பரிசோதனை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், நாடு முழுவதும் உள்ள 40 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஆண்டுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை நடத்தப்படும்.

(v) நாடு முழுதும் உள்ள இஎஸ்ஐசி மருத்துவமனைகள் மூலம் நடத்தப்படும் முகாம்கள் மூலம் இந்த உடல்பரிசோதனைநடத்தப்படும். முன்கூட்டிய உடல் நல பாதிப்புகளைக் கண்டறிவதன் மூலம், தீவிர உடல் நல பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றார்.

4. பிப்ரவரி 24, 2026 தேதியிட்ட, தமிழ்நாட்டின் மலைப்பகுதிகளுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்புகளை நீர்த்துப்போகச் செய்வதாகக் கூறப்படும், ஒரு சர்ச்சைக்குரிய அரசாணை (G.O.) குறித்த ஆய்வு.

(i) HACA-வின் (மலைப்பகுதி பாதுகாப்பு ஆணையம்) தோற்றமும் நோக்கமும்

- கட்டுப்பாடற்ற வளர்ச்சி மற்றும் கனிமத் திருட்டிலிருந்து, எளிதில் பாதிக்கப்படக்கூடிய மலைச் சூழலமைப்புகளைப் பாதுகாப்பதற்காக, 1990-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் HACA உருவாக்கப்பட்டது.
- அரசாணை எண் 44-இன் கீழ், "வளர்ச்சித்" திட்டங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையின் சூழலியல் நிலைத்தன்மையை விடப் பொருளாதார ஆதாயத்திற்கு முன்னுரிமை அளிக்காமல் இருப்பதை உறுதி செய்வதே HACA-வின் பணியாகும்.
- பாதுகாக்கப்பட்ட மண்டலங்களில் நிலத்தை விவசாயத்திற்காக மாற்றுதல், வீட்டுமனைப் பிரிவுகளை உருவாக்குதல், சுரங்கத் தொழில், சுற்றுலாத் திட்டங்கள் மற்றும் அணைகள், மின் நிலையங்கள் அல்லது சாலைகளை அமைத்தல் ஆகியவற்றிற்கு HACA-வின் கட்டாய ஒப்புதல் தேவைப்படுகிறது.

(ii) உலகளாவிய மற்றும் தேசிய அறிக்கைகளின் பின்னணி

- காட்கில் அறிக்கை (2011): மேற்குத் தொடர்ச்சி மலையில் சுரங்கத் தொழில், அணைகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு முழுமையான தடை விதிக்கப் பரிந்துரைத்தது; ஆனால் இது மத்திய அரசாலும் ஐந்து மாநில அரசுகளாலும் நிராகரிக்கப்பட்டது.
- கஸ்தூரிரங்கன் அறிக்கை (2013): அரசாங்கத்தின் கோரிக்கைகளைத் திருப்திப்படுத்தும் வகையில் காட்கில் அறிக்கையின் பரிந்துரைகளை மாற்றியமைத்தது; இதுவே "வளர்ச்சி" என்ற போர்வையில் விரைவான சுற்றுச்சூழல் சீரழிவின் சகாப்தத்தைத் தொடங்கி வைத்ததாக இந்தக் கட்டுரை வாதிடுகிறது.

(iii) "ஆணையின் ஆபத்து" (24.02.2026 தேதியிட்ட அரசாணை) குறித்த ஆய்வு

- நகர்ப்புற விரிவாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், "வீட்டுமனைப் பிரிவுகளுக்கான ஒப்புதல் நடைமுறைகளை எளிமைப்படுத்தும்" என்று கூறி, முந்தைய அரசாங்கம் இந்த ஆணையை வெளியிட்டது.
- இந்த அரசாணை, HACA-வின் பாதுகாப்பு அதிகார வரம்பிலிருந்து பரந்த நிலப்பரப்புகளை நீக்குவதன் மூலம், HACA-வின் அதிகாரத்தை நடைமுறையில் செயலிழக்கச் செய்கிறது.
- HACA-வின் மேற்பார்வையிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளில், விவசாய நிலங்களை இப்போது வீட்டுமனைகளாக மாற்றலாம்; மேலும் சுரங்கத் தொழில், சாலை அமைத்தல் மற்றும் உல்லாச விடுதிகள் கட்டுதல் ஆகியவற்றைச் சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமலேயே மேற்கொள்ளலாம்.

(iv) மாநிலம் தழுவிய தாக்கம் மற்றும் புவியியல் ரீதியான விலக்குகள்

- கோயம்புத்தூர்: இந்த அரசாணை வால்பாறையை மட்டுமே மலைப்பகுதியாக வகைப்படுத்துவதாகக் கூறப்படுகிறது; வெள்ளிங்கிரி போன்ற சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இது விலக்கிவிடுகிறது.
- ஈரோடு: மாவட்டம் முழுவதுமே HACA-வின் அதிகார வரம்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது; இதன் மூலம் தலைமலை போன்ற முக்கிய மலைத்தொடர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
- திருநெல்வேலி: அகத்தியமலைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனப்படுத்தப்பட்டுள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாப்பு: நீலகிரி மற்றும் கொடைக்கானல் மட்டுமே ஆணையத்தின் வரம்பிற்குள் பெருமளவில் தக்கவைக்கப்பட்டுள்ளன.

(v) வனவிலங்குகள் மற்றும் மனித-விலங்கு மோதல்கள் மீதான தாக்கம்

- யானை வழித்தடங்கள்: கர்நாடகாவிலிருந்து சத்தியமங்கலம் வழியாக கோயம்புத்தூர் (தடகம் பள்ளத்தாக்கு) மற்றும் முதுமலைக்குச் செல்லும் யானைக் கூட்டங்களின் இடம்பெயர்வுப் பாதைகள், புதிய, ஒழுங்குபடுத்தப்படாத உல்லாச விடுதிகள் மற்றும் செங்கல் சூளைகளால் அச்சுறுத்தப்படுகின்றன.
- இடம்பெயர்வுத் தடை: யானைகளால் மலைகளைத் தாண்டி "குதித்துச் செல்ல" முடியாததால், அவை அடிவாரத்தில் உள்ள பள்ளத்தாக்குப் பாதைகளையே சார்ந்துள்ளன. இந்தப் பகுதிகளில் ஏற்படும் ஆக்கிரமிப்புகள், வனவிலங்குகளை மனிதக் குடியிருப்புகளுக்குள் தள்ளுவதால், மனித-விலங்கு மோதல்கள் பெருகுகின்றன.
- உணவுச் சங்கிலி சீர்குலைவு: நரிகள் மற்றும் சிறுத்தைகள் போன்ற சிறிய விலங்குகளின் வாழ்விட இழப்பு, காட்டுப்பன்றிகள் மற்றும் மயில்களின் பெருக்கத்திற்கு வழிவகுக்கிறது. இது பின்னர் விவசாயிகளுக்குப் பெரும் பயிர் சேதத்தை ஏற்படுத்துகிறது.

(vi) சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகள்

- தண்ணீர் பற்றாக்குறை: மலைகளின் அழிவு காடுகளின் இழப்பிற்கு வழிவகுக்கிறது, இது மழைப்பொழிவு குறைவதற்குக் காரணமாகிறது. இது தமிழ்நாட்டைப் பாலைவனமாக மாற்றிவிடும்.
- மீள முடியாத இழப்பு: பல மில்லியன் ஆண்டுகள் உழைத்து உருவான மலைத்தொடர்கள், ஒரே மாதத்தில் அவற்றை அழித்துவிடக்கூடிய குறுகிய காலக் கொள்கைகளால் ஆபத்துக்குள்ளாகின்றன.

5. தமிழ்நாட்டின் தற்போதைய மின் நெருக்கடி குறித்த ஆய்வு

(i) தற்போதைய மின் தேவை நிலவரம்

- ஏப்ரல் 21, 2026 அன்று, தமிழ்நாட்டின் மின் தேவை 21,060 மெகாவாட் என்ற புதிய வரலாற்று உச்சத்தை எட்டியது.
- பல மாவட்டங்களில் வெப்பநிலை 100 டிகிரி பாரன்ஹீட்டைத் தாண்டிய கடும் வெப்ப அலைகள் காரணமாக, குளிரூட்டிகள் (Air Conditioners) மற்றும் கூலர்களின் பயன்பாடு பெருமளவில் அதிகரித்துள்ளது.
- தென் மாநிலங்களின் தினசரி மின் தேவை 69,934 மெகாவாட்டிலிருந்து 73,805 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. தென் மாநிலங்களிலேயே தமிழ்நாட்டில்தான் தற்போது அதிகபட்ச மின் தேவை நிலவுகிறது.
- வழக்கமாக சராசரி தினசரி மின் தேவை 16,000 மெகாவாட்டாக இருக்கும் நிலையில், மே 4 முதல் மே 28 வரையிலான கடும் கோடைக்கால உச்சக்கட்டத்தில், இந்தத் தேவை வழக்கத்திற்கு மாறாக மிக அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) மின் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் மின் தடைகளுக்கான காரணங்கள்

- குடியிருப்பு மற்றும் வணிகப் பகுதிகளில் அதிக மின்சக்தி தேவைப்படும் குளிரூட்டும் சாதனங்கள் ஒரே நேரத்தில் பயன்படுத்தப்படுவதால், அப்பகுதிகளில் உள்ள மின்மாற்றிகள் (Transformers) மீது அதிகப்படியான மின்ச்சுமை ஏற்படுகிறது; இதுவே மின் தடைகளுக்கு வழிவகுக்கிறது.
- தற்போது நிலவும் மின் பற்றாக்குறைக்கு, எரிவாயு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

(iii) அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

- கோடைக்கால உச்சக்கட்ட மின் தேவையைச் சமாளிக்கும் வகையில், ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 'Greenko' நிறுவனத்திடமிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை விலைக்கு வாங்க, தமிழ்நாடு மின்வாரியம் (Tangedco) ஒப்புதல் பெற்றுள்ளது.
- இந்த ஒப்பந்தம் நான்கு ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்; இதன்படி ஒரு மெகாவாட்டிற்கு ஆண்டுக்கு ₹1.50 கோடி வீதம் கட்டணம் செலுத்தப்பட உள்ளது. இந்த மின் விநியோகம் குறிப்பாக, மாலை 6:00 மணி முதல் நள்ளிரவு வரையிலான மின் தேவை உச்சக்கட்டமாக இருக்கும் நேரங்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது.
- கடும் வெப்ப அலை காரணமாக ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை ஈடுகட்டும் வகையில், திறந்த சந்தையிலிருந்து (Open Market) கூடுதல் மின்சாரத்தை விலைக்கு வாங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

(iv) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை நிலவரம்

- காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம்: காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா அளவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது; இங்குள்ள 20,000-க்கும் மேற்பட்ட காற்றாலைகள் மூலம் சுமார் 8,923 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- பருவக்காலச் சாதகம்: தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் அமைந்துள்ள காற்றாலைகள், ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில் அதிகபட்ச அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

(v) மின் சேமிப்புக்கான முன்மொழியப்பட்ட தீர்வுகள்

மின்சாரத்தை உற்பத்தி செய்வது மட்டும் போதுமானதல்ல; அது வீணாகாமல் இருக்க, அதனைத் திறம்படப் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

- திறமையான மின் விளக்குகள் பயன்பாடு: வீடுகளில் பழைய வகையிலான குண்டு பல்புகள் (Incandescent bulbs) அல்லது டியூப் லைட்டுகளைப் பயன்படுத்துவதைத் முழுமையாகத் தவிர்த்துவிட்டு, அதற்குப் பதிலாக LED பல்புகளைப் பயன்படுத்துமாறு பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். * இயற்கை வடிவமைப்பு: பகல் நேரங்களில் இயற்கை சூரிய ஒளியைப் பயன்படுத்தும் வகையில், வீடுகள் முறையான காற்றோட்டம் மற்றும் ஜன்னல்களுடன் வடிவமைக்கப்பட வேண்டும். இது செயற்கை விளக்குகளின் தேவையைக் குறைக்கும்.
- சாதனப் பராமரிப்பு: மின்விசிறி இறக்கைகள் மற்றும் விளக்குகளைத் தவறாமல் சுத்தம் செய்வது, அவை உச்சபட்ச செயல்திறனுடன் இயங்குவதை உறுதி செய்கிறது.
- திறமையான ஏசி பயன்பாடு: குளிரூட்டியைப் பயன்படுத்தும்போது, கதவுகள் மற்றும் ஜன்னல்கள் இறுக்கமாக மூடப்பட்டிருக்க வேண்டும். மேலும், சுவர்களுக்கு வெளிர் நிறங்களில் வண்ணம் பூசுவது அறைகளைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.
- சமையலறை செயல்திறன்: இண்டக்ஷன் அடுப்புகளில் அகன்ற அடிப்பகுதியுள்ள பாத்திரங்களைப் பயன்படுத்துவது சமையல் நேரத்தைக் குறைத்து, ஆற்றலைச் சேமிக்கிறது.
- சூரிய ஆற்றல் விரிவாக்கம்: கூரைகளில் சூரிய மின் தகடுகளை நிறுவுவதை ஊக்குவிக்க, அரசாங்கம் அதிக மானியங்களை வழங்க வேண்டும்.

அரசாங்கத்தின் மூலோபாய கொள்முதல் மற்றும் ஒழுக்கமான தனிநபர் சேமிப்பு ஆகியவற்றின் மூலம், தற்போதைய மின்சாரப் பற்றாக்குறையை அரசு வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும்